இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 08.01.2026

# உலகம் உங்கள் கையில்!

தமிழ்நாட்டு இளைஞர்கள் கையில் உலகத்தைக் கொடுத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். **‘நீங்கள் படியுங்கள், உங்களுக்கான அனைத்துத் தேவைகளையும் நான் பார்த்துக் கொள்கிறேன்’** என்ற நம்பிக்கையை உருவாக்கி விட்டார் முதலமைச்சர் அவர்கள்.

20 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் முதற் கட்டமாக 10 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இதன் மூலம் அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல், மருத்துவம், விவசாயம், சட்டம், பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்துறைப் பயிற்சி போன்ற அனைத்து படிப்புகள் சார்ந்த மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படுகிறது. Dell, Acer, HP போன்ற உலகத் தரமான நிறுவனங்களின் மடிக்கணினிகள் மாணவ - மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது.

மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த மடிக்கணினிகளில் Intel i3 / AMD Ryzen 3 Processor, 8GB RAM, 256GB SSD நினைவகம், Windows 11 Home Strategic மற்றும் BOSS Linux OS

ஆகிய மென்பொருட்கள் உள்ளன. கல்வி மற்றும் திட்டப்பணிகளுக்காக MS Office 365, செயற்கை நுண்ணறிவு மென்பொருளான Perplexity Pro வின் ஆறு மாத சந்தாவும் வழங்கப்பட்டு உள்ளது.

**“தமிழ்நாடு என்றால் கல்வி, கல்வி என்றால் தமிழ்நாடு என்ற பெயரை பெற்றுள்ளது”** என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள் சொன்னதை மெய்ப்பிக்கும் விழாவாக அது அமைந்திருந்தது.

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற இந்த விழா என்பது மடிக்கணினி வழங்கும் தொடக்கவிழாவாக மட்டுமல்ல; தமிழ்நாடு எந்த வகையில் எல்லாம் அறிவில் சிறந்த, கல்வியில் சிறந்த, அனைத்து வகையிலும் சிறந்த வெற்றிமிகு மாநிலமாக இருக்கிறது என்பதை உணர்த்தியது.

“சீனாவின் வளர்ச்சியும் தமிழ்நாட்டின் வளர்ச்சியும் ஒன்று. தமிழ்நாட்டைப் போல வேகமாக ஏன் முன்னேற முடியவில்லை என்பதை பிற மாநிலங்கள் சிந்திக்க வேண்டும். முதலீட்டாளர்களை இவ்வளவு வலுவாக தமிழ்நாடு ஈர்க்கக் காரணமாக இருப்பது திறமையான மனித வளம், தகுதியான கட்டமைப்பு வசதிகள், எளிமையான நிர்வாகம், பரிமாற்றத் திட்டங்கள் ஆகும்” என்று சொன்னார் இந்தியாவின் தலைசிறந்த பொருளாதார வல்லுநர் அரவிந்த் சுப்பிரமணியம்.

**“ஒரு பையன் படிக்கிறான் என்றால் சொத்தை வித்தாவது கூலி வேலைக்குச் சென்றாவது படிக்க வைக்க நினைக்கும் நாடு தமிழ்நாடு. அத்தகைய மாநிலத்தில் கல்விக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் அரசாக தமிழ்நாடு அரசு இருக்கிறது” என்று மனம் திறந்து பாராட்டினார் நடிகர் கார்த்தி.**

**“உங்களுக்கான தடைகளை உடைத்து முன்னோக்கி நகர்த்துகிறது அரசு. கல்வி கிடைப்பதன் மூலமாக தலைமுறையே வளர்கிறது. இந்த அரசாங்கம் தான் படி படி என்று திரும்பத் திரும்பச் சொல்கிறது. மாணவர்களின் கல்விக்கு உறுதுணையாக இருக்கும் முதலமைச்சருக்கு நன்றிகள்” என்று சொன்னார் நடிகர் விஜய் சேதுபதி.**

**“உலக வரலாற்றில் ஒரு அரசு, எதைத் தனது மூலதனமாக நம்புகிறது என்பது முக்கியம். பயம், மிரட்டல், பக்தி என எத்தனையோ கருத்துகளை நாடுகள் மூலதனமாகப் பார்க்கின்றன. நமது ‘திராவிட மாடல்’ அரசு அறிவை, கல்வியை மூலதனமாகப் பார்க்கிறது” என்று அழுத்தமாகச் சொன்னார் நடிகர் மணிகண்டன்.**

**‘நான் முதல்வன்’ திட்டத்தால் பலன் பெற்று ஐ.ஏ.எஸ்.ஆன அதிகாரி பிரசாந்த் பேசும்போது, “அம்மாவும் பாட்டியும் தான் என்னை வளர்த்தார்கள். பொருளாதாரத்தில் மிகப்பெரிய துன்பங்களை நான் எதிர்கொண்டேன். ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலமாக கிடைத்த ரூ.1.15 லட்சம் தான் எனக்கு பெரும் உதவியாக இருந்தது. அதனை வைத்துத்தான் படித்தேன். இன்று ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்கிறேன்” என்றார் பிரசாந்த்.**

**ஐ.பி.எஸ். தேர்வில் வெற்றிபெற்ற இன்பா என்ற பெண் பேசும் போது, “எனது தந்தை பேருந்து நடந்துநர். எனது அம்மா பீடி சுற்றும் தொழிலாளி. நான் இன்று ஐ.பி.எஸ். ஆகி இருக்கிறேன். நான்கு ஆண்டுகளுக்கு முன் இதே போன்ற ஒரு மேடையில் உங்களைப் போன்று கூட்டத்தோடு கூட்டமாக பின்புறம் உட்கார்ந்து இருந்தேன். இன்று ஐ.பி.எஸ். ஆகிவிட்டேன். அரசின் திட்டத்தால் தான் இது சாத்தியம். என்னைப் போல நீங்களும் ஆகலாம்” என்றார். தனது வாழ்க்கை மூலமாகவே அரசின் சாதனையைச் சொன்னார் இன்பா.**

**“ டீ கடையில் வேலை பார்க்கும் தந்தையின் மகளாக, 12 ஆம் வகுப்புக்கு மேல் படிக்க முடியாத நிலைமையில் இருந்தேன். கல்விக் கடனுக்காக பல்வேறு வங்கிகளை நாடிய போதும் முழுமையான உதவி கிடைக்கவில்லை. ஆனால் அரசின் 7.5 இட ஒதுக்கீட்டால் அண்ணா பல்கலைக் கழகத்தில் படித்து இன்று நல்ல வேலையில், நல்ல ஊதியத்தில் இருக்கிறேன். 50 சதவிகிதம் தான் கடன் கொடுக்க முடியும் என்று சொன்ன வங்கிகள் இன்று எனக்கு ரூ.70 லட்சம் வரை வீட்டுக் கடன் வழங்கவும் தயாராக உள்ளன. இது எங்களுடைய வாழ்க்கையை மட்டுமல்ல; எங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தையும் மாற்றியுள்ளது. இதனை உருவாக்கிய முதலமைச்சருக்கு நன்றி” என்று அண்ணா பல்கலைக் கழக மாணவி பவித்ரா சொன்னபோது அரங்கமே கண்கலங்கிக் கை தட்டியது.**

**“நாங்க இருக்கோம், நீங்கள் படித்துவிட்டு மட்டும் வாருங்கள். உலகம் உங்கள் கையில் என்று சொல்லும் அரசு இது” என்றார் பிரபலமான நகைச்சுவைப் பேச்சாளர் அலெக்சாண்டர் பாபு.**

“உலகமே உங்கள் கையில் உள்ளது. நீங்களும் வென்று வாருங்கள், நாங்களும் வென்று வருகிறோம்” என்று மாண்புமிகு முதலமைச்சர் சொன்ன போது அரங்கமே கைதட்டலால் அதிர்ந்தது.

**தமிழ்நாட்டு மாணவ சமுதாயம் வெல்லும். மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் வெல்வார்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (06.01.2026) தலைமைச் செயலகத்தில், 22-வது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.1.2026) முகாம் அலுவலகத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.1.2026) முகாம் அலுவலகத்தில், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் மற்றும் திருப்பூர் மாநகராட்சி நான்காம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் குடும்பத்தினருடன் சந்தித்து, தனது மகள் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், சென்னை ஈஸ்வரி பொறியியல் கல்லூரி தலைவர் டாக்டர் ஆர்.சிவகுமார், இணைத் தலைவர் எஸ்.நிரஞ்சன், முதல்வர் டாக்டர் பி.தெய்வசுந்தரி மற்றும் விருது பெற்ற ‘ஃபோட்டானிக்ஸ் ஒடிஸி’ என்ற மாணவர் குழுவினர் சந்தித்து, தொலைதூர மற்றும் பின்தங்கிய பகுதிகளுக்கு அதிவேக இணைய இணைப்பை விரிவுபடுத்தும் நோக்கில், மாணவர்கள் செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைய உள்கட்டமைப்பு மாதிரியை உருவாக்கியதற்காகவும், இத்திட்டம் அதன் புதுமை, தொழில்நுட்ப வலிமை மற்றும் உலகளாவிய சமூகத் தாக்கத்திற்கான சாத்தியக்கூறுகளுக்காக அங்கீகரிக்கப்பட்டும், “NASA International space apps challenge 2025 Global winner” Most Inspiration Award – விருது பெற்றதற்காக வாழ்த்துப் பெற்றனர். இப்போட்டியில், 167 நாடுகளைச் சேர்ந்த 18,860 அணிகளில் இருந்து முதல் 10 உலக வெற்றியாளர்களில் ஒன்றாக ‘ஃபோட்டானிக்ஸ் ஒடிஸி’ மாணவர் குழு இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஓய்வூதியம் எனும்

## ஒப்பற்ற அமுதத்தை வாரி வழங்கிய வள்ளல் முதல்வர்!

### சென்னைப் பல்கலைக்கழக ஓய்வாசிரியர் பேரவைத் தலைவர் – பேராசிரியர் மா.செல்வராசன் பாராட்டு!

சென்னை, ஜன. 8 -

தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் புதைந்து போன பழைய ஓய்வூதியத்தைப் புதுப்பித்து வழங்கியுள்ள வள்ளன்மை மிக்க முதலமைச்சர் அவர்களுக்குப் பராட்டுகளையும் நன்றிகளையும் சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சார்பில் வழங்குவதாகச் சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை மேனாள் தலைவரும் சென்னைப் பல்கலைக்கழக ஓய்வாசிரியர் பேரவைத் தலைவருமான பேராசிரியர் மா.செல்வராசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 21 ஆண்டுகளாகப் பழைய ஓய்வூதியம் கனவாக இருந்தது. கனவு நிறைவேறுமா கானலாய்க் காணாமல் போய்விடுமா என்று இலட்சக்கணக்கான அரசுப் பணியாளர்களும் ஆசிரியர்களும் கவலைப்பட்டுக் கண்ணீர் விட்டுக் காத்திருந்தனர். அவர்கள் கனவை நனவாக்கிப் பழைய ஓய்வூதியத்தைப் புதுப்பித்து முதல்வர் மீண்டும் பரிவுடன் வழங்கியுள்ளதால் அவர்கள் களிப்புக் கடலில் நீந்துகின்றனர்.

கடந்த அரசு கைகளை விரித்து விட்ட நிலையில்,திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவாறு பழைய ஓய்வூதியம் நடைமுறைப் படுத்தப்படும் என்று அரசுப் பணியாளர், ஆசிரியர் இல்லங்களில் பொங்கலுக்கு முன்பே பால் பொங்க வைத்துவிட்டார் முதலமைச்சர்!

நிதிச்சுமை பொதிச்சுமையாக அழுத்தியபோதும் விதிச்சுமை வேண்டாம் எனக் குறுக்கே விழுந்து தடுத்தபோதும் புதுச்சுமையைத் தாங்கிடத் தயார் என்று தமிழ்நாடு முதலமைச்சர் தடந்தோள்கள் உயர்த்தித் தந்துள்ள ஓய்வூதியப் பயன்கள் ஒவ்வொரு பணியாளர், ஆசிரியர் உள்ளத்திலும் இல்லத்திலும் உவகை ஊற்றைப் பெருக்குகின்றது.

தாயுள்ளம் கொண்ட தலைவராக உயர்ந்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஓய்வூதியத்தை உயிர்ப்பித்த ஒப்பற்ற செயலை வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்திய வல்லமையை உளமாரப் பாராட்டி நன்றி மலர்ச் சோலையை

முதலமைச்சருக்கு நல்குகின்றனர் அரசுப் பணியாளர்களும் ஆசிரியர்களும்!

இவ்வாறு பேராசிரியர் மா. செல்வராசன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.